செ.வெ.எண்: நாள்: 17.08.2021

**விருதுநகர் மாவட்டம்**

**சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ஏதோ ஒரு வகையில் வாழ்வாதாரத்தை ஏற்படுத்தி நீடித்த நிலைத்ததொரு வருமானத்தை ஈட்ட வழிவகை செய்ய வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுரை**

**---**

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று(17.08.2021) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கம், நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க இயக்க திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி நிதியிணைப்பு, வாழ்வாதாரம் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து அதிக கவனம் செலுத்துவதற்கும், திருநங்கைகளுக்கான சிறப்பு சுய உதவிக்குழு விரைவில் அமைத்து விரைவில் அவர்களுக்கான சேவைகளை பெற்றுத்தரவும், அத்துடன் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் 100% விடுபடாமல் சுய உதவிக்குழுக்களில் இணைக்கவும், அரசு பிற துறைகளான நபார்டு, தாட்கோ, திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, ஊரக வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனம் மற்றும் வேளாண்மைத்துறையின் சேவைகளை சுய உதவிக்குழுவிற்கு பெற்றுத்தரவும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமும் பிற துறைகளும் இணைந்து செயல்படவும், அனைத்து திட்ட சேவைகளும் சுய உதவிக் குழுவை மையப்படுத்தி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ஏதோ ஒரு வகையில் வாழ்வாதாரத்தை ஏற்படுத்தி நீடித்த நிலைத்ததொரு வருமானத்தை ஈட்ட வழிவகை செய்யவும் வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.மேகநாதரெட்டி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுரை மற்றும் ஆலோசனைகளை சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கினார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்க திட்ட இயக்குநர் திரு.தெய்வேந்திரன், நபார்டு வங்கி பொது மேலாளர் திரு.ராஜசுரேஸ்வரன், தாட்கோ மாவட்ட மேலாளர் திருமதி.ஜீவரேகா, தமிழ்நாடு மாநில ஊரக புத்தாக்க இயக்கத்திட்ட செயல் அலுவலர் திரு.சதீஸ்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**